# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,861 — 1969 ජූලි 4 වැනි සිකුරාදා — 1969.7.4**

14,861 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு யூலை மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 727 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 738 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 733 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 735 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீகத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரிசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

---

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். " இலங்கையர் " என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவும் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

**No. AB. 106/X. 2108/68**

## தகவல் பகுதி

### அதிபர் பதவி—அரசாங்க திரைப்படப் பிரிவு

தகவல் பகுதியின் அரசாங்க திரைப்படப் பிரிவின் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர் அரசாங்க சேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.7.18.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.7.25.

**குறிப்பு :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய கடிதம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா வென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே செலுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையதுமாகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் விதவை அனாதைகள் நிதிக்குப் பணஞ் செலுத்துமாறு கோரப்படுவார். நியமனம் பெறுபவர் முதலில் மூன்று ஆண்டுகளுக்குத் தகுதிகாண் அடிப்படையில் பணிபுரிவார்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு.—ரூ. 8,400—480 — ரூ. 13,200 ஆண்டொன்றுக்கு. (ரூ. 11,760 முன்னர் திறமைகாண் பரீட்சையும் 2 வருடங்களுக்கு ரூ. 11,280 உம்.)

**குறிப்பு :** தகுதியையும் அனுபவத்தையம் முன்னிட்டு திறைசேரியின் அனுமதியுடன் அபேட்சகர் தகுந்த சம்பளத்தில் அமர்த்தப் படுவார். அரசாங்க ஊழியர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால், 13.6.1959 இன் 492 ம் இலக்க சுற்றுநிருபத்தால் திருத்தப் பட்ட 26.2.1957 இன் 361 ஆம் இலக்க திறைசேரிச் சுற்று நிருபத்தில் கண்டுள்ள நியதிகளின்படி அவரது சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடைய வராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1969.7.18 இல் 25 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லைக் கட்டுப்பாடு இல்லை).

(இ) (i) அங்கீகாரம் பெற்ற ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக அல்லது அதற்குச் சமமான அல்லது அதிலும் உயர்ந்த தகைமையுடைமை.

(ii) (அ) 16 மி. மீ., 35 மி. மீ. திரைப்படங்களைத் தயாரித்தல், விவரணச் சித்திரங்கள், செய்திச் சுருள்கள், குறுபடங் கள் போன்றவற்றை நெறிப்படுத்துதல் ஆகியவற்றில் 8 வருட கால அநுபவமும் பெற்றுள்ளமை.

(ஆ) படப்பிடிப்பு, படங்கழுவதல், பதித்தல், தரப்படுத்துதல்*, ஒலிப்பதிவு செய்தல், போன்ற சினிமாக் கலையின் பல கிளைகளைப் பற்றிய உன்னத அறிவும், திரைப்படத் தயாரிப்பு சம்பந்தமான உபகரணங்களது செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் அநுபவமும் பெற்றிருத்தல்.

(இ) மேலேகுறித்த சினிமாக் கலையின் துறைகளில் ஒன்றில் அல்லது பலவற்றில் பெற்றுள்ள திறமைக்கு உண்ணாட்டு அல்லது வெளிநாட்டு அங்கீகாரம்பெற்ற நிறுவனங்கள் அளித்துள்ள பாராட்டுகளைப் பெற்றமை.

***குறிப்பு :** இப்பகுதி உத்தியோகத்தர்களாக இருந்து விண்ணப்பம் செய்தவர்கள் சிரேஷ்ட கல்வித் தராதரம் அல்லது அதற்குச் சமமான அல்லது மேலான கல்வித் தகைமைபெற்று, 4 (இ) (ii) ல் குறிப்பிட்டுள்ள அநுபவமும் பெற்றிருப்பின் அவ் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு :** சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக் குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றி தழ் ஏற்கப்படமாட்டாது);

(ஆ) பல்கலைக்கழக பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத் தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழிநுட்பத் தகைமையும் : உயர் தொழிற்றகைமை அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு :**—(1)சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப் பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப் படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்ட னுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத் தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ"எனக் குறிப்பிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்ற மைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர் களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1969.6.27.

7–179—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

---

## காணிக்கமிசனர் திணைக்களம்

### பாரிய குடியேற்றத் திட்டங்களிலும் கிராமியக் குடியேற்றத் திட்டங்களிலும் அபிவிருத்தி வேலை அதிகாரிகள் பதவிகள்

பாரிய குடியேற்றத்திட்டங்களிலும், கிராமியக் குடியேற்றத்திட்டங்களிலும் அபிவிருத்தி வேலை அதிகாரிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

2. **சம்பளப் படிமுறையும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிலை யானதும், இளைப்பாறல் சம்பள உரிமையுடையதுமாகும். இப்பதவிக்கான வருடாந்தச் சம்பளம் ரூபா 1,980 இல் தொடங்கி வருடமொன்றுக்கு ரூபா 120 வீதம் உயர்வு பெற்று அதன் பின்பு ரூபா 180 வீதம் உயர்வு பெற்று ரூபா 4,620 வரை உயர்வடையும். அரசாங்க நிதிப்பிரமாணங் களுக்கேற்ப வாழ்க்கைப்படியும் வீட்டு வாடகையும் வழங்கப்படும்.

3. **விண்ணப்பிப்போருக்கான கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமை களும்.**—விண்ணப்பதாரி 27.7.1969 ஆம் திகதிக்கு 25 வயதிற்குக் குறைவுபடாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி இலங்கையராயுமிருக்கவேண்டும்.

**கல்வித் தகைமைகள்**

(1) (அ) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையிலோ அல்லது அதற்குச் சமமான பரீட்சையிலோ சித்தியடைந்தவராயும் அத்துடன் கீழ்க் காணப்படும் தகைமைகளில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற் பட்ட வற்றையோ உடையவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) (1) கட்டிட நிருமாண வேலையில் 5 வருட அனுபவமுடைய வராயும், பூமி மட்டமிடுதலிலும் அளவை செய்வதிலும் அளவைப் பகுதி அதிகாரியினுல் வழங்கப்படும் தராதரப்பத்திரம் பெற்ற வராயிருத்தல் வேண்டும்.

(2) கீழ்க்காணப்படுபவற்றில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட வற்றையோ இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி அனுமதிக்கப் பட்ட பாடத்திட்டத்திற்கமைய சித்தியடைந்த தகைமைப் பத்திரத் உடையவராயிருத்தல் வேண்டும்:

(அ) கட்டிட நிருமாணம் சம்பந்தமாக 5 வருட அனுபவமுடைய வராயும் கட்டிட நிருமாணம் I ஆம், II ஆம், மட்டமிடல் I ஆம், II ஆம்

(ஆ) கட்டிட நிருமாணம் சம்பந்தமாக 5 வருட அனுபவமுடைய வராயும் நகர அல்லது கட்டிட நிருமாண இஞ்சினியரின் தராதரப்பத்திரத்தை உடையவராயும்.

(3) கட்டிட நிருமாணம் சம்பந்தமாக 5 வருட அனுபவமுடையவராயும் பகிரங்க வேலைப் பகுதியாரின் உப அதிகாரிகள் தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்தோ அல்லது அதற்குச் சமமான தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்தோ இருத்தல் வேண்டும்.

4. **சேவை பற்றிய நிபந்தனைகள்.**—இந்த நியமனம் 3 வருடப் பரீட்சைக்கால நிபந்தனைக்குட்பட்டதாகும்.

(அ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பதவியில் அமர்த்தப்பட முன்னர் வைத்தியப் பரீட்சைக்குத் தோற்றி தக்கவரென தெரிவு செய்யப்படல் வேண்டும். அத்துடன் இலங்கையில் எப்பகுதியிலாவது சேவைசெய்யத் தகுதியுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் அதிகாரிகள் மோட்டார்க்காரொன்றைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அரசாங்க நிதிப்பிரமாணங்களுக்கேற்ப போக்குவரத்துப் பணம் கொடுக்கப்படும்.

(இ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் ரூபா 2,000 ம் பிணை வைக்க முன்வருதல் வேண்டும்.

(ஈ) அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடாத்துதல் பற்றி தற்போது வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் எதிர் காலத்தில் வெளியிடப்படும் நிபந்தனைகளுக்கும் பிரமாணங்களுக்கும் முக்கியமாக 1956 ஆம் ஆண்டைய 33 ஆம் இலக்க மொழிச்சட்ட நிபந்தனைகளையும் பிரமாணங்களையும் கைக்கொண்டொழுகுதல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பப்பத்திரத்துடன் தங்களைப் பற்றி நன்கு தெரிந்த இருவரிடமிருந்து நற்சாட்சிப்பத்திரங்களைப் பெற்று அணைத்து அனுப்புதல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை இதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பங்களில் விண்ணப்பிக்க வேண்டும். அது போலல்லாத விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் 27.7.1969 ஆம் திகதிக்கு முன்னதாக காணிக்கமிசனர் திணைக்களம் செக்ரட்டறியட் கட்டிடம், தபால் பெட்டி இலக்கம் 500 என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைத்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கிடைத்ததாக அறிவிக்கப்படமாட்டாது.

8. இந்த வர்த்தமானியில் I ஆம் பிரிவில், II ஆம் பந்தியில் முதலில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏனைய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளையும் பார்க்கவும்.

கே. என். வீரக்கொடி,
காணிக் கமிசனர்.

காணிக்கமிசனர் திணைக்களம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 4 ந உ.

மாதிரி விண்ணப்பம்

1. (அ) முழுப் பெயர் : ————.
(ஆ) முதல் எழுத்துடன் பெயர் : ————.

2. முகவரி : ————.

3. சாதியம் : ————.

4. பிறப்பிலேயே இலங்கையரா அல்லது பதிவின் மூலம் இலங்கையரானவரா ? என்பது : ————.

5. 27.7.1969 ம் திகதியன்றைக்கு வயது : ————.

6. பிறந்த திகதியும் பிறந்த வயதும் : ————.
(அ) விண்ணப்பதாரியின் (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் பிரதியுடன்) : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பனின் தகப்பன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பனின் தகப்பனின் தகப்பன் :————

7. கல்வித் தராதரம் சித்தியடைந்த திகதியுடன் (பிரதி அணைக்கப்படல் வேண்டும்) : ————.

8. பாடசாலையிலிருந்து விலகிய திகதியிலிருந்து செய்த தொழிலும் கிடைத்த வேதனமும் : ————.

9. கட்டிட வேலைகளில் பெற்றுள்ள அனுபவம் : ————.

10. யுத்த சேவையில் இருந்திருந்தால் அது பற்றிய விபரம் : ————

11. அணைத்துள்ள சாட்சிப்பத்திரங்களின் எண்ணிக்கை : ————.

12. விண்ணப்பதாரியைப்பற்றி நன்கறிந்த இருவரிடமிருந்து பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களும் அவற்றை வழங்கியவர்களின் பெயர், முகவரி, பதவி ஆகியன : ————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

**கவனிப்பு.**—விண்ணப்பதாரி இலங்கையில் பிறந்தவராகில் (அ) வுடன் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி இலங்கையில் பிறந்தவர் அல்லாவிடில் (அ), (ஆ) அல்லது (இ) அல்லது (ஈ) என்னும் இரண்டையும் நிரப்புதல் வேண்டும்.

7–23—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861.

---

## ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஜூலம்பிடிய பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் கிறுவாபத்து வடக்கு பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

ஜூலம்பிடிய பிரிவிற்கு பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தி ஒன்று வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்து கொள்ளலாம். அரசாங்க சேவையில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும் ஏனைய பிறதராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும் காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சிச்சபை அலுவலகங்களிலும் கிராம நீதி மன்றங்களிலும் தபால் அலுவலகங்களிலும் பொலிஸ் ஸ்தானம் சனசமூக நிலையங்களிலும் பிரசித்திமான வியாபார நிலையங்களிலும் கூட்டுறவுதாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். பீ. திலகரத்ன,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
ஹம்பாந்தோட்டை,
1969 ம் ஆண்டு ஜூன் மீ 18 ந உ.

7–3—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெற்றிடங்கள்

சிங்கள/தமிழ்/ஆங்கில—நிகழ்ச்சித் தயாரிப்பாளர்/அமைப்பாளர் — சங்கீதம்/நாடகம்/சித்திரம்/பேச்சு/கிராமநிகழ்ச்சி பதவிகளுக்கு, 25–45 வயதுக் குட்பட்ட இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகள் இருப்பதற்கான சான்றுகளைக் காட்ட வேண்டும் :—

(அ) ஆக்கத்திறன்.

(ஆ) எழுத்தாளராகவோ அல்லது நாடகம் எழுதுவதில் அல்லது தயாரிப்பதில் அனுபவம் உள்ளவராகவோ அல்லது சங்கீதத்தில் திறனுடையவராகவோ இருக்க வேண்டும்.

(இ) நிகழ்ச்சிப் பகுதியின் சேவைமொழியில் நிரம்பிய அறிவும் இலங்கையின் ஏனைய இரண்டு மொழிகளுள் ஒன்றில் பொது வான அறிவும் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) போதுமான பொது அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**வேதன விகிதம்.**—

நிகழ்ச்சி அமைப்பாளர்—எல்லாம் உட்பட ரூ. 625—900 (5 × 25–5 × 30)

நிகழ்ச்சித் தயாரிப்பாளர்—எல்லாம் உட்பட ரூ. 525—825 (5 × 20–8 × 25)

தெரிவு செய்யப்படுபவரின் தகைமை அனுபவம் என்பனவற்றைப் பொறுத்து தொடக்க வேதனத்துக்கு மேல் ஏற்ற ஒரு கட்டத்தில் அவர் அமர்த்தப்படலாம்.

இப்பதவி மூன்று ஆண்டு ஒப்பந்தத்திற்கும் அதன் பின் காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்படுவதற்கும் உட்பட்டதாகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஊழியர் சேமலாப நிதிக்கு தங்கள் வேதனத்தின் நாலு சத விகிதத்தைச் செலுத்தக் கோரப்படுவர்.

அரசாங்க சேவையில் அல்லது ஏனைய கூட்டுத்தாபனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தத்தமது நிலையத்தலைவர் மூலமாக அனுப்பும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத்தின் உத்தியோக மொழிக் கொள்கையை ஏற்படுத்துவதில் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க உத்தியோக மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கென ஏற்கெனவே இயற்றப் பட்ட அல்லது இனிமேல் இயற்றப்படும் எந்நியதிக்கும் தெரிவு செய்யப் படும் விண்ணப்பதாரர்கள் கட்டுப்படும்படி கோரப்படுவர்.

இதன் கீழ்க் காணப்படும் மாதிரிப்படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7 " என்று முகவரியிடப்பட்டு 1969 ஜூலை, 15 ம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் சிங்கள/தமிழ்/ஆங்கில நிகழ்ச்சித் தயாரிப்பாளர்/நிகழ்ச்சி அமைப்பாளர்—சங்கீதம்/நாடகம்/சித்திரம்/பேச்சு/கிராமநிகழ்ச்சி—என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

கொழும்பு 7,
1969 ஜூன் 24.

என். டி. ஜயவீர,
மா அதிகாரி.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

| | | | |
|---|---|---|---|
| *சிங்களம் | *நிகழ்ச்சி அமைப் பாளர் | *சங்கீதம்<br>*நாடகம் | பதவிக்கான விண்ணப்பம் |
| *தமிழ் | *நிகழ்ச்சித் தயாரிப் பாளர் | *சித்திரம்<br>*பேச்சு | |
| *ஆங்கிலம் | | *கிராமநிகழ்ச்சி | |

(*பொருத்தமற்றதைக் கீறிவிடுக)

1. (i) முழுப்பெயர் :————.

(ii) முதலெழுத்துக்களுடன் பெயரும் முகவரியும் :————. (திருவாளர்/திருமதி/செல்வி என்பதைக் குறிப்பிடுக)

2. பிறந்த இடமும் திகதியும் :————.

3. நாட்டினம் :————.

4. கல்வித் தகைமையும், பயிற்சித் திறனும்—

| படித்த அல்லது பயிற்சிபெற்ற பாட சாலை அல்லது நிலையம் | திகதிகள் ஆரம்பம்—முடிவு | சித்தியடைந்த பரீட்சைகள் | வகித்த பொறுப்புள்ள பதவிகளும் மற்றும் செயலாற்றல்களும் |
|---|---|---|---|
| ———— | ———— | ———— | ———— |

5. சித்தியடைந்த உயர்ந்த பரீட்சை—

(1) சிங்களம் :————.

(2) தமிழ் :————.

(3) ஆங்கிலம் :————.

(சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்).

6. தொழில் தகைமைகள்—

(1) பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் ஆகியனவற்றிற்கு எழுதிய விபரங்கள். (எழுதப்பட்ட விஷயங்களின் சாராம்சத்தையும், வெளியீடுகளின் பெயர்களையும் தருக) :————.

(2) வானொலி நாடகம் அல்லது சித்திரம் எழுதும் அனுபவம். (ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளின் தலையங்கங்களையும், ஒலிபரப் பப்பட்ட தினங்களையும் குறிப்பிடுக) :————.

(3) நிகழ்ச்சி தயாரிப்பதில் அனுபவம்—மேடை நாடகம், வானொலி நாடகம் என்பன. (நிகழ்ச்சியின் தலைப்பும், தினமும்) :——.

(4) சங்கீத அறிவு :————.

(5) பண்ணை, கிராமவாழ்க்கை சம்பந்தப்பட்ட அறிவு. (கிராம சேவைக்கு மாத்திரமே தேவைப்படும்) :————.

(6) உருவாக்கும் திறன் இருப்பதாக கருதுவதற்குக் காரணம் காட்டுக :————.

(7) பொழுதுபோக்குகளும் வேறு அக்கறைகளும் :————.

7. முந்திய அனுபவங்களையும், வேலை பார்த்த விபரங்களையும் முறைப் படி குறிப்பிடுக—

| வேலைபார்த்த இடத்தின் பெயர் | வகித்த பதவி | திகதி ஆரம்பம்—முடிவு | வேலையை விட்டதற்கான காரணம் |
|---|---|---|---|
| ———— | ———— | ———— | ———— |

8. உமது சொந்த வாழ்க்கையில் நன்கு பரீட்சயமான மூவரின் பெயர்கள், முகவரிகள், பதவிகள் என்பனவற்றைத் தெரிவிக்கவும்—

(1) ————.

(2) ————.

(3) ————.

9. நற்சான்றுகள் வழங்கியுள்ளோரின் பெயர்களும், முகவரிகளும்—

(1) ————.

(2) ————.

(3) ————.

10. வேறு விபரங்கள் :————.

11. இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதன்கண் உள்ள ஏதேனும் விபரங்கள் தவறு அல்லது சரியானவை அல்ல எனக் காணப்பட்டால் தெரிவு செய்யப்படும் தினத்திலோ அதற்கு முன்னரோ தகைமை இழப்பு நேரிடும் என்பதையும் நியமனம் பெற்ற பின்னரும் நான் வேலை நீக்கம் செய்யப்படுவதற்கு உரியவனுவேன் என்பதையும் அறிந்துள்ளேன்.

————,
திகதி :————. விண்ணப்பதாரின் கையொப்பம்.

7–140—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலிஸ்தானங்கள்

சபையின் நிதி, உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பகுதிகளிலுள்ள V ஆம் தர கணக்கு உத்தியோகத்தர்கள், கணக்குப் பரிசோதனை உத்தியோகத்தர்கள் பதவிகட்கு கவனிக்கப்படுவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—(எல்லாம் உட்பட) மாதாந்தம் ரூபா 600—40 × 10—ரூபா 1,000—ரூபா 800, ரூபா 920 பெறும்போது வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

3. **தகைமைகள்.**—

(i) வயது—1.7.1969 ஆம் திகதியன்று 22 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்க வேண்டும்.

(ii) (அ) தத்துவம் பெற்ற கணக்காளர் பரீட்சையின் இடைப்பரீட்சையில் (இடைர்மீடியற் பரீட்சை) சித்தியெய்தியிருக்க வேண்டும்; அல்லது

(ஆ) செலவு, வேலை கணக்காளர் பரீட்சையில் (கோஸ்ட் அன்ட் வேர்க்ஸ் அக்கவுன்டன்ஸ்) பரீட்சையில் I ஆம், II ஆம், III ஆம் பகுதிகளில் சித்தியெய்தியிருக்க வேண்டும்; அல்லது

(இ) கணக்கியல் தகுதித் தேர்வுப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியிருக்க வேண்டும்; அல்லது

(ஈ) இவற்றையொத்த தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்; அத்தோடு

பொருந்திப் பயிலும் ("ஆட்டிக்கிள்ஸ்") காலத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் அல்லது அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனமொன்றில் கணக்குப் பரிசோதனை வேலையில் ஆகக் குறைந்தது 5 ஆண்டு அனுபவமிருத்தல் வேண்டும்

4. (அ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களை, தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள் 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ம் பிரிவின் நியதிகளிற்கு எற்பச் சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

(ஆ) விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபன மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

5. **வேலை நிபந்தனைகள்.**—தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள்—

(1) நியமனத்திற்கு முன்பு வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாகி உடல் உறுதியுள்ளவர்களென சித்தியெய்த வேண்டும்.

(2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருவதற்குச் சபையால் விதிக்கப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெறவேண்டும்.

(4) தங்களது சம்பளத்தில் 10 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். சபை 15 சத விகிதத்தைச் செலுத்தும்.

(5) இலங்கையில் எப்பகுதியிலேனும், சபையின் எப்பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

6. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எனக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, இருல வீதி,
நாராகேன்பிட்டி,
கொழும்பு 5.

## இலங்கை போக்குவரத்துச் சபை

### மாதிரிப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி : ————.
2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் : ————.
3. தபால் முகவரி : ————.
4. பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல—இணைக்கப்பட வேண்டும்)
5. 1.7.1969 ந் திகதியன்று சரியான வயது : ————.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? : ————.
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? : ————.
(விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்)
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி : ————.
(படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக)
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக சான்றிதழ்களின் பிரதிகள் மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்பட வேண்டும்) : ————.
10. தொழினுட்பத் தகைமைகள் : ————.
(படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள்—(மூலப் பிரதிகள் அல்ல)—இணைக்கப்படவேண்டும்)
11. தொழில் : ————.
(பாடசாலை விட்டு விலகியபின் பார்த்த வேலைகளின் விபரம். அதாவது, பதவிப் பெயர், வேலை கொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக.)
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்று பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம். : ————.
(வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக)
13. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப்பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப்பதவியிலேனும் செய்த வேலையின் விபரங்களைச் சுருக்கமாகத் தருக.)
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் : ————.
15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? :————.
16. வேறேதேனும் விபரங்கள் : ————.
17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? : ————
அங்ஙனமாயின் விவரங்கள் தருக : ————.
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும் : ————.

(1) ————

(2) :————

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

7-141—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861.

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### தமிழ் ஆசிரியர் பரீட்சை—ஒக்தோபர், 1969

மேற்படி பரீட்சை கீழ்க் குறிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 1969 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 14, 15, 16, 17 ஆந் திகதிகளில் நடைபெறும்.

**பரீட்சை நிலையங்கள்.—**

அம்பலாங்கொடை, அனுராதபுரம், பதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, தம்புல்லை, திக்வல்லை, எகலியகொடை, கல்கமுவை, காலி, ஹோமாகம, ஹொரணை, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொனராகலை, நாவலப்பிட்டி, நிக்கவரெட்டியா, நீர்கொழும்பு, நுவரெலியா, பருத்தித்துறை, பொல்லனறுவை, இரத்தினபுரி, திரிகோணமலை, வவுனியா, வியாங்கொடை.

2\. பிரமாணங்களின் 2 ம் பந்தியிற் குறிப்பிட்டவாறு ஆசிரியர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

3\. மாதிரி விண்ணப்பப் படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவை 8″ × 13″ அளவினதாய கடதாசியில் முறைப்படி தயாரிக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் (தட்டெழுத்துமூலம் தயாரிக்கப்படின் நன்று) 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பரீட்சாதிகாரி, பரீட்சைப்பகுதி, மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். பரீட்சாதிகாரியின் அல்லது அங்கு கடமையாற்றும் வேறு ஊழியர்களினது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வர்த்தமானப் பத்திரிகையிற் கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தை ஒத்திராத, பரீட்சார்த்திகளால் தம் எண்ணப்படி தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4\. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன்னதாக 1969 ஆம் ஆண்டு ஒக்தோபரிலும் அதன் பின்னரும் நடைபெறும் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்காய திருத்தப்பட்ட பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் வாசித்து அவற்றைப் பற்றிய பூரண விளக்கத்தைப் பெறுதல் வேண்டும்.

5\. இப்பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் நேரிற்பெற விரும்புவோர் அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திலிருந்து 40 சதத்திற்குப் பெற்றுக் கொள்ளலாம் ; தபால் மூலம் பெற விரும்புவோர் தமது கடிதத்துடன் ஒரு ரூபாவிற்குரிய காசோலையையேனும் அல்லது காசுக் கட்டளையையேனும் பரீட்சாதிகாரிக்கு அனுப்பினால் அவர்களுக்கு இது அனுப்பிவைக்கப்படும்.

6\. மேலே 4 ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட தமிழ் ஆசிரியர் பரீட்சைப் பிரமாணங்களுடன் கீழ்க்காணும் திருத்தங்களும் சேர்க்கப்பட வேண்டும் : இவை 1969 ஒக்தோபர் மாதத் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்கும் நடைமுறையிலிருக்கும். :—

இப்பிரமாணத்தின் 1 வது பந்தி, **பகுதி** " அ " பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும்.

1\. **பரீட்சைத் திட்டம்**

இப்பரீட்சை மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி (அ) கல்விப் பாடங்களில் எழுத்துப் பரீட்சை வினாத்தாள்கள்,
பகுதி (ஆ) தொழிலுக்குரிய பாடங்களில் எழுத்துப்பரீட்சை வினாத்தாள்கள்,

பகுதி (இ) கற்பித்தலில் செய்கை முறைப் பரீட்சை என்பனவாகும்.

பகுதி " அ "

**கட்டாய பாடங்கள் :**

(i) தமிழ்ப்பாஷையும் இலக்கியமும்.
(ii) எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம்.

**விருப்பத்திற்குரிய பாடங்கள் :**

| | |
|---|---|
| (iii) சரித்திரம் | (x) ஆங்கிலம் |
| (iv) புவியியல் | (xi) வர்த்தகவியல் |
| (v) குடியியல் | (xii) கணக்கியல் |
| (vi) சித்திரம் | (xiii) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் |
| (vii) ஆரம்ப கணிதம் | (xiv) பயிர்ச்செய்கையியல் |
| (viii) பொது விஞ்ஞானம் | (xv) பொருளியல் |
| (ix) மனையியல் | |

விருப்பத்திற்குரிய பாடங்களில் கணக்கியல் அல்லது வர்த்தகவியல் அல்லது பொருளியல் அல்லது சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் என்னும் பாடங்களைத் தெரிந்தெடுக்கும் பரீட்சார்த்திகள் கட்டாய பாடங்களில் வர்த்தக எண்கணிதத்தைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். தமிழ்ப் பாஷையும் தமிழ் இலக்கியமும் என்ற பாடத்துக்கு மூன்று மணித்தியால வினாப்பத்திரமாகும். மற்றைய எல்லாப் பாடங்களுக்கும் இரண்டு மணித்தியால வினாப்பத்திரங்களாகும்.

இப்பகுதியில் சித்தியடைவதற்கு ஒரு பரீட்சார்த்தி கட்டாய பாடங்கள் இரண்டிலும், விருப்பத்திற்குரிய பாடங்களில் எவையேனும் இரண்டிலும் திருப்திகரமான அளவுக்குத் தேர்ச்சியடைதல் வேண்டும். விருப்பத்துக்குரிய பாடங்களில் மூன்று பாடங்களுக்கு மேல் எடுத்தல் கூடாது.

2\. இப்பிரமாணத்தின் 4 ஆம் பக்கத்தில் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் தமிழ் ஆசிரியர் பரீட்சையில " அ " பிரிவினின்றும் விலக்களிக்கப்படுவர்.

வர்த்தக எண்கணிதம், கணக்கியல், வர்த்தகவியல், பொருளியல், சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் ஆகிய ஐந்து பாடங்களில் இரண்டு திறமைச் சித்திகளுடன் கூடிய சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது வர்த்தக எண்கணிதம், கணக்கியல், வர்த்தகவியல், பொருளியல், சுருக்கெழுதும் தட்டெழுத்தும் ஆகிய பாடங்களில் எவையேனும் இரண்டு பாடங்களில் பெற்ற திறமைச் சித்திகளுடன் தமிழ்ப்பாஷை, வர்த்தக எண்கணிதம் ஒரு தடவையில் அல்லது இரு தடவைகளில் வேறு நான்கு பாடங்கள் ஆகிய ஆறு பாடங்களிற் பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) ;

**இத்துடன்**

இலங்கை (உயர்தரக்) கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தின் கணக்கியல், வர்த்தகமும் நிதியும், பொருளியல் ஆகிய மூன்று பாடங்களில் எவையேனும் இரண்டு பாடங்களில் ஒரே தடவையிற் சித்தி பெற்றிருத்தல் அல்லது தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்குப் பதிவியல் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் உயர்தர வர்த்தகவியல் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது பரீட்சைப் பகுதியால் நடாத்தப்படும் கணக்குப் பதிவியல் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அத்தகைய பரீட்சார்த்திகள் பரீட்சையில் எப்பகுதிக்காவது தோற்றாதிருப்பதற்கான சலுகைகள் கோரும் தமது கடிதங்களை நேரகாலத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும் :

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### 1969 ம் ஆண்டு ஒக்தோபர் மாதத்தில் நடைபெறும் தமிழ் ஆசிரியர் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

பரீட்சையின் எப்பகுதிக்குத் தோற்றுகிறீர் ; சுட்டிலக்கம் :

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

(இங்கே " A " அல்லது " B " எனப் பெரிய
எழுத்தில் எழுதுக).

1\. பரீட்சார்த்தியின் வழமையான கையொப்பம் : ————.
ஆணு/பெண்ணு : ————.

2\. பரீட்சார்த்தியின் முழுப்பெயர் : ————.
(வண./திரு. /திருமதி/செல்வி என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். ஆசிரியரின் உத்தியோகத்தில் வழங்கும் பெயரினை எழுதுதல் வேண்டும். அன்றேல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயரினை எழுதுதல வேண்டும்.)

3\. பிரவேச அட்டை முதலியன அனுப்ப வேண்டிய முகவரி : ————.

4\. பரீட்சை நிலையம் (மிகக்கூடிய விருப்பத்திற்குரிய நிலையத்தை முதலாவதாகவும் மற்றவற்றை அதன் கீழும் எழுதுக) : ————.
1. : ————.
2. : ————.
3. : ————.

(மூன்று நிலையங்களும் வர்த்தமானப் பிரசுரத்தின் முதலாம் பந்தியிற் தரப்பட்ட நிலைங்களிலிருந்து தெரியப்பட்டனவாயும் வேறு வேறாயும் இருத்தல் வேண்டும்.)

| | |
|---|---|
| 5. (அ) பரீட்சைக் கட்டணம் சம்பந்தமாதத் தேவையான முத்திரைகளை இங்கே ஒட்டுக. தமிழ் ஆசிரியர் பரீட்சை " ஏ " பிரிவிற்கு ரூபா 25.00; " பி " பிரிவிற்கு ரூபா 20.<br><br>(ஆ) ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி ரூபா................. | முத்திரை ஒட்டும் இடம். இம் முத்திரை பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்டு பயனற்றதாக்கப்பட வேண்டும். முத்திரைகள் ஒன்றையொன்று மருவாத வகையில் ஒட்டப்படல் வேண்டும். |

6. "ஏ" பிரிவின் விருப்பத்திற்குரிய பாடங்கள் ("×" என்ற குறியின் மூலம் தாம் எடுக்கும் பாடங்களைக் குறிப்பிடல் வேண்டும். இப்பகுதியிலிருந்து மூன்று பாடங்களுக்கு மேல் தெரிவு செய்தலாகாது).

| | | | |
|---|---|---|---|
| 3. சரித்திரம் | | 9. மனையியல் | |
| 4. புவியியல் | | 10. ஆங்கிலம் | |
| 5. குடியியல் | | 11. வர்த்தகவியல் | |
| 6. சித்திரம் | | 12. கணக்கியல் | |
| 7. ஆரம்ப கணிதம் | | 13. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் | |
| 8. பொதுவிஞ்ஞானம் | | 14. பயிர்ச்செய்கையியல் | |
| | | 15. பொருளியல் | |

7. தற்போதைய நியமனம் பற்றிய விபரம் :—.

(அ) பாடசாலையின் பெயரும் முகவரியும் முகாமையும் :————.

(ஆ) அந்தஸ்து :————.
(நிரந்தர/தகுதிகாண்/தற்காலிக/பதில் ஆசிரியரா ?)

(இ) பரீட்சார்த்தி கற்பிக்கும் பாடங்கள் :————.
(சாதாரண பாடசாலைப் பாடங்கள்/விசேட பாடசாலைப் பாடங்கள்)

(ஈ) பரீட்சார்த்தி எம்மொழி மூலம் கற்பிக்கிறார் ? :————.

(உ) வாரம் ஒன்றுக்கு எத்தனை மணித்தியாலங்கள் ? :————.

(ஊ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் :————.

8. ஆசிரியரின் பதிவிலக்கத்தை அல்லது நியமனக் கடிதத்தின் இலக்கத்தை அல்லது கல்வியதிபதி அல்லது பிரதேசக் கல்வி அதிகாரியிடமிருந்து நியமன அங்கீகாரம் பற்றிய உறுதிக் கடிதத்தின் விபரத்தை இங்கே குறிப்பிடுக : ————.

9. தாம் சித்தியடைந்த வேறு பரீட்சைகளின் அல்லது சேவையின் அடிப்படையில் சலுகைகோரின் அது பற்றிய விபரம் : ————.

சலுகை கோரும் பகுதி : ————.

10. இப்பகுதி பாடசாலை முகாமையாளரால் அல்லது தலைமை ஆசிரியரால் நிரப்பப்படல் வேண்டும்.

இப்பரீட்சார்த்தி சம்பந்தப்பட்ட சகல கடிதக் குறிப்புகளையும் பரிசீலனை செய்தேன் எனவும், அவற்றின்படி இவ்விண்ணப்பத்தின் 8 ம், 9 ம் கூடுகளிலுள்ள விபரங்கள் சரியானவை எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

பாடசாலையின் பெயர் : ————.

பாடசாலை முகாமை : ————.

(அரசாங்கக் கல்வியதிபதியின் முகாமைக்குட்பட்ட/உதவி நன்கொடை பெறுத அனுமதி பெற்ற பாடசாலையா எனக் குறிப்பிடுக.)

கையொப்பம் : ————.

பெயர் : ————.

திகதி : ————.

11. பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று :

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் இங்கு ஒட்டப்பட்ட முத்திரை என்னால் ஒட்டப்பட்டதெனவும் இது இதன்முன் பயன்படுத்தப்படாத பெறுமதியுள்ள முத்திரை எனவும் நான் உறுதிகூறுகிறேன். இப்பரீட்சை சம்பந்தமாகப் பரீட்சாதிகாரியாற் பிரசுரிக்கப்படும் பிரமாணங்களுக்கும், பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் கீழ்ப்படிந்து ஒழுக வேண்டிய விதிகளுக்கும் ஒரேமுகமாக இணங்கி நடப்பதற்கு உடன்படுகிறேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்

திகதி : ————.

12. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் ;
(எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும்).

.............................................. ஆகிய நான் மேற்கூறிய பரீட்சார்த்தி ........................... என்னுமிடத்தில் வதிபவர் எனவும், எனக்கு நன்கு அவரைத் தெரியும் எனவும் 1969 ஆம் ஆண்டு................ மாதம்.... ஆந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
உறுதிப்படுத்தியவர் கையொப்பம்

பெயர் : ————. தகுதி : ————.
முகவரி : ————. திகதி : ————.

**கவனிக்க வேண்டியவை :**

விண்ணப்பப் படிவத்தின் 12 ஆம் கூட்டில் பரீட்சார்த்தியின் கையொப்பம் தகுதியுடைய ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(i) விண்ணப்பங்களை அனுப்பும்பொழுது சேவையிலில்லாத பரீட்சார்த்தி இப்படிவத்திற் கேட்கப்பட்டுள்ள உறுதிப்பத்திரத்தை அரசாங்க கல்வி அதிகாரியின் முகாமைக்குட்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண அதிகாரி, வழக்கறிஞர் அல்லது நொத்தாரிசு, 2,400/- ரூபாவையேனும் அதற்கு மேற்பட்ட தொகையையேனும் வருடாந்த அடிப்படைச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணை பெற்ற உத்தியோகத்தர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு, தலைமைப் பிக்கு, வேறுமத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள குருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோர்களில் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(ii) ஆசிரியராக இருக்கும் பரீட்சார்த்தி தான் படிப்பித்துக் கொண்டிருக்கும் பாடசாலைத் தலைவர் முன்னிலையில் தனது கையொப்பத்தை இடல் வேண்டும்.

மேற்கூறிய தகுதி வாய்ந்த ஒருவரால் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டது என்பதற்குப் பரீட்சார்த்தியே முழுப் பொறுப்பாளியாவர்.

கே. ரீ. டபிள்யு. சுமணசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஞூ யூன் மீ 23 ந் உ.

7-43—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மகாகனத்தருவ உபபிரிவு

மகாகனத்தருவ உபபிரிவில் மகாகனத்தருவ காம்பின் குழாய் நீர் வினியோக வேலைத்திட்டத்திற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராத புரத்திலுள்ள பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு யூலை மாதம் 23 ம் திகதி காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். அதன்பின் உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 45,000/– ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவு மொத்த ஸ்தாபனங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விகளுக்கான வெற்றுப்பத்திரங்களை மகாகனத்தராவ, அனுராதபுரம், பதவியா ராசாங்கண ஆகிய உபபிரிவு நீர்ப்பாசனக் காரியாலயங்களில் 18.7.69 நண்பகல் 12 மணிவரை கேள்விக்கட்டண மாக ரூபா 50/– செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியிற் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது. கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்த கங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப் படுத்தி இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

4. குழாய்நீர் வினியோக வேலையில் தேர்ச்சியும் அதற்கான ஆயுதங் களும் உண்டென்று அத்தாட்சிப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வினியோகிக்கப்படும்.

இக்கேள்விக்கான மேலதிக விபரங்கள் எல்லாவற்றையும் மகாகனத் தராவ உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

டீ. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மகாகனத்தருவ உபபிரிவு.

மிகிந்தலை,
1969 ம் ஆண்டு ஜூன் மீ 23 ந உ.

7–101—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

---

## நீர்ப்பாசன இலாகா

### யாழ்ப்பாண உபபிரிவு

யாழ்ப்பாண உபபிரிவிலுள்ள கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வடமாகாண பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு ஆடி மாதம் 30 ந் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | பதிவுத் தொகை | கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா | ரூ. ச. |
| 1. மருதன் குளத்தின் கீழ் கைவாய்க்கால்கள் 1 லிருந்து 11 வரையும் 1 ம் வினியோக வாய்க்காலும் அமைத்தல் .. .. .. | 38,000.. | 50 0 |
| 2. முருகண்டிக் குளத்தின் இடதுகரை பிரதான வாய்க்காலின் கீழ் கை வாய்க்கால்கள் 7 லிருந்து 17 வரையும் அமைத்தல் .. .. | 47,000.. | 50 0 |
| 3. அம்பலப்பெருமாள் குளத்தின் இடதுகரையின் கீழ் கைவாய்க்கால்கள் 1 லிருந்து 9 வரையும் அமைத்தல் .. .. .. | 61,000.. | 100 0 |
| 4. வன்னேரிக் குளத்தின் நீர்ப்பாசனப் போக்கு வரத் துக் கஸ்டங்களை நீக்குவதற்கான திருத்த வேலைகள் செய்தல் .. .. .. | 29,000.. | 50 0 |
| 5. இரணமடுக்குளக்கட்டில் குளப்பக்கத்திலுள்ள கல் லுப்பதிப்புக்கு பாதுகாப்பான சுவர் கருங்கல்லினால் 37 ம் சங்கிலியிலிருந்து 53 ம் சங்கிலி வரைக்கும் கட்டுதல் .. .. .. | 35,000.. | 50 0 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்குறிக்கப்பட்டுள்ள தொகைக் கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், ஐக்கிய சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்களும் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் யாழ்ப்பாணம்/மன்னார்/ வவுனியா/முல்லைத்தீவு/வவுனிக்குளம் முதலிய இடங்களிலுள்ள நீர்ப் பாசனப் பொறியியலாளர்களின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஆடி மாதம் 26 ந் திகதி பிற்பகல் 3.00 மணிவரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப் பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியிய லாளர்களுக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப் பாசனப் பொறியியலாளர்களின் அலுவலகத்தில் மேல் குறிக்கப்பட்ட தொகைகளைக் கேள்விக்கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக் கட்டணங்களை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்விகளைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றை யும் யாழ்ப்பாண உபபிரிவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாண உபபிரிவு.

கிளிநொச்சி,
1969 ம் ஆண்டு ஜூன் மீ 20 ந உ.

7–157—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### பாவித்த டையர்களினதும் அலுமினியக் கழிவுகளினதும் விற்பனை—பொரலஸ்கமுவ, வெரகெரையிலுள்ள விற்றுத் தீர்க்கும் வளவு

கொழும்பு–5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், ஒவ்வொரு பொருட்களுக்கும் எதிரே குறிக்கப்பட்ட முடிவுத் திகதிகளில் மு. ப. 10.00 மணிவரை, பொரலஸ்கமுவ, வெரகெரையிலுள்ள இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் வளவில் இருந்து அலுமினியக் கழிவுகளையும் பாவித்த டையர்களையும் கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான பொறி யிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

1. **அலுமினியக் கழிவு**

(அ) சுத்தமான அலுமினிய வெட்டுத் துண்டுகள் – கிட்டத்திட்ட 19 தொன். 08 அந்தர்.

(ஆ) நிறம்பூசிய அலுமினியம் –கிட்டத்திட்ட 25 தொன். 08 அந்தர். 30.7.1969 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு முடிவடையும்.

2. **பாவித்த டையர்கள்:**—கலப்பு அளவுகளில் 100 ஐக் கொண்டுள்ள கூறுகளில் புதுப்பிக்கக்கூடிய கிட்டத்தட்ட 2000 டையர்களும், கலப்பு அளவுகளில் 100 ஐக் கொண்டுள்ள கூறுகளில் கழிக்கப்பட்ட 5000 டையர் களும்.

3.8.1969 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு முடிவடையும்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிகளுக்கு முந்திய திகதி களில் நண்பகல் 12.00 மணிவரை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரங்களில், பொறியிட்ட கேள்விகள், இரட் டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். கொழும்பு–5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக அலுமினியக் கழிவு சம்பந்தமாக ரூபா 100/- ஐயும் டையர்களுக்கு ஒரு கூறுக்கு ரூபா. 50/- வீதம் ஆகக் கூடியதாக ரூபா. 1000/- ஐயும் காசாகக் கட்டி, இதன் பற்றுச்சீட்டுக்களை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்கு முன் எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

பொரலஸ்கமுவ, வெரகெரை, இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் வளவில் வழமையான அலுவலக நேரங்களில் பொருட்களைப் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள லாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

வினியோகப் பகுதி,
200, கிருல வீதி,
கொழும்பு–5.

6–183/1—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல, 14,861

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

**பாரவண்டி (' ட்றக் ') அளவு விசிறி நாடாக்கள் விற்பனை**

**விற்றுத்தீர்க்கும் நிலையம், இரத்மலானை**

இரத்மலானையிலுள்ள இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் நிலையத்திலிருக்கும் பாரவண்டி அளவு விசிறி நாடாக்களை ("பான் பெல்ட்ஸ்") கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான கேள்விப்பத்திரங்களை, கொழும்பு –5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் கோருகிறார்.

கொண்டினென்டல், குட்யியர், டன்லொப், யோன்புல், பெரேறிறிப், பயர்ஸ்டோன் ஆகிய இனங்களைக்கொண்ட பாரவண்டி அளவு விசிறி நாடாக்கள் கூறுகளாகத் தொகுக்கப்பட்டு, கேள்விப்பத்திர சாதனங்களில் காட்டப்பட்ட விவரங்களின்படி கூறுகளாகவே கேள்வியில் விடப்படும்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை, இவ் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரங்களில் பொறியிட்ட கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். கொழும்பு –5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா. 100/- ஐக் காசாகக் கட்டி, இதன் பற்றுச்சீட்டுக்களை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்குமுன் எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

கேள்விகள், 31.7.1969 ஆம் திகதியன்று மு. ப. 10.00 மணிக்கு முடிவடையும்.

விசிறி நாடாக்களின் கூறுகளை வழமையான அலுவலக நேரங்களில் இரத்மலானையிலுள்ள இ. போ. ச. விற்றுத்தீர்க்கும் நிலையத்தில் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

வினியோகப் பகுதி, இலங்கைப் போக்குவரத்துச் சபை,
200, கிருல வீதி, கொழும்பு–5.

6—183/2—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

---

## திருகோணமலை மாவட்டம்

**சிறிய நீர்ப்பாசன வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள்**

திருகோணமலை மாவட்டம் கமத்தொழிற்சேவை உதவி ஆணையாளரால் கீழ்க்காணும் சிறிய நீர்ப்பாசன வேலைகட்குக் கேள்விப்பத்திரங்கள் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரர்களிடமிருந்து 23.7.69 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| குளத்தின் பெயர் | வேலைவிபரம் | பயிர்ச்செய்கைக்குழுவின் பகுதி |
|---|---|---|
| **குச்சவெளி காரியாதிகாரியின் பகுதி** | | |
| 1. குஞ்சுக்குளம் | திருத்தம் | புதுவெளிக்குளம் |
| 2. பூவரசங்குளம் | புதுப்பித்தல் | கும்புறுப்பிட்டி |
| 3. அடஞ்சலைக்காத்தான் குளம் | திருத்தம் | கும்புறுப்பிட்டி |
| 4. பேரில்லாக்குளம் | திருத்தம் | சமளன்குளம் |
| 5. ஆனைவிளுந்தான்குளம் | திருத்தம் | தென்னமரவாடி |
| 6. ஒட்டுப்புள்ளுக்குளம் | புதுப்பித்தல் | சமளன்குளம் |
| 7. குசவணுத்து அணைக்கட்டு | திருத்தம் | குசவணுத்துவெளி |
| 8. பொய்கைக்குளம் | துரிசு கட்டுதல் | குசவணுத்துவெளி |
| 9. இருவாசி ஆறு | றெகுலேற்றர் கட்டுதல் | குசவணுத்துவெளி |
| 10. சமளன்குளம் | வான் கட்டுதல் | சமளன்குளம் |
| 11. ஒட்டன்குளம் | வாய்க்கால் கட்டுதல் | வன்னியார்வெளி |
| 12. களிக்காட்டுக்குளம் | துரிசு திருத்தம் | ஆண்டான்குளம் |
| 13. சமளன்குளம் | கோஸ்வே கட்டுதல் | சமளன்குளம் |
| **மூதூர் காரியாதிகாரியின் பகுதி** | | |
| 1. வேப்பன்குளம் | துரிசு கட்டுதல் | கட்டைப்பறிச்சான் |
| 2. குறவன்வட்டவன்குளம் | திருத்தம் | சேனையூர் |
| 3. வேலன்குளம் | திருத்தம் | ஷை |
| 4. கறடிப்பாளிக்குளம் | திருத்தம் | சம்பூர் |
| 5. செம்பியடிக்கொத்து | அணைக்கட்டு | கிரோண்டக்குளம் |
| 6. சிறு ஆலங்குளம் | துரிசு கட்டுதல் | சம்பூர் |
| **கோமரங்கடவல காரியாதிகாரியின் பகுதி** | | |
| 1. குடா எத்தபெண்டிவெவ | திருத்தம் | எத்தபெண்டிவெவ |
| **கிண்ணியா காரியாதிகாரியின் பகுதி** | | |
| 1. மகமார்குளம் | திருத்தம் | மகமார் சல்லிக்கலப்பு |

இக்கேள்விகளுக்கான வெற்றுப்பத்திரங்களை இவ்வலுவலகத்தில் 19.7.69 நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பத்திரம் பெறுவதற்கு கேள்விக்கட்டணமாக ரூபா 10.00 ஒரு கச்சேரியில் கட்டியதற்கான பற்றுச்சீட்டு காண்பிக்கப்படல் வேண்டும். இக்கேள்விகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. சண்முகராசா,
கமத்தொழிற்சேவை உதவி ஆணையாளர்,
திருகோணமலை மாவட்டம்.

திருகோணமலை,
1969 ம் ஞு ஜூன் மீ 21 ந வ.

7–38—4.7.69 ந் திகதிய வரத்தமானி இல. 14,861

---

எனது இல : இஅ/1/238

## அம்பாறைக் கச்சேரி

கீழ்க்குறிப்பிடும் வேலைக்காக பொதுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசன இலாகா அல்லது கல்விப்பகுதித்திணைக்களங்களில் கொந்திருத்துக் காரர்கள், பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், பிரத்தியேகமான கொந்திருத்துக்காரர் களிடமிருந்து 1969 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ம் திகதி காலை 11 மணி வரைக்கும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் "முத்திரை" வைக்கப்பட்ட "கேள்வி"ப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

34 ம் இலக்கக் குடியேற்றத்திட்ட குடியேற்ற உத்தியோ
கஸ்தரின் வாசஸ்தலத்தில் தண்ணீர்த்தொட்டி கட்டுதல்

2. இத்தீவில் எக் கச்சேரியிலாவது மேற்கூறிய வேலைக்கு ரூபாய் பத்து (10) கேள்விப்பத்திரப் பணமாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் பெயருக்குக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திலுள்ள காணிப் பகுதியில் ஒப்புவித்துமேற் குறிக்கப்பட்ட வேலைக்காகிய "கேள்விப்" பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். மேலும் முதலாம் பந்தியில் குறிப்பிட்ட சங்கங்களால் இப்பணம் கட்ட வேண்டியதில்லை. கேள்விப் பத்திரங்கள் பாரமெடுக்கும் கடைசித் தினத்திற்கு முன்தினம் பிற்பகல் 1 மணிவரைக்கும் "கேள்விப்" பத்திரங்கள் கொடுக்கப்படும்.

3. இரு பிரதிகளில் தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப் பத்திரத்தை மாவட்ட அரசாங்க அதிபர், அம்பாறை என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும். அப்படியில்லாவிடின் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் காரியாலய உதவியாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்படல்வேண்டும். கேள்விப் பத்திரங்கிய அடங்கிய தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "34 ம் இலக்கக் குடியேற்றத்திட்ட குடியேற்ற உத்தியோகஸ்தரின் வாசஸ்தலத்தில் தண்ணீர்த் தொட்டி கட்டுதல்" என்று குறிப்பிடப்படல் வேண்டும். குறிப்பிட்ட பத்திரங்களில் தெளிவாக எழுதப்படாதிருந்தால் அக் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. 1969 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ம் திகதி மு. ப. 11.00 மணிக்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் காரியாலய உதவியாளரின் அறையில்கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அப்படி கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது அவ்விடத்திற்கு கேள்விப் பத்திரகாரர் அல்லது அவரது கடிதத்தால் நியமிக்கப்பட்ட அவரின் பிரதிநிதி ஒருவர் சமூகம் கொடுப்பதற்கு இடமளிக்கப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப் பத்திரகாரருக்கு அதைப்பற்றி அறிவிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிட்ட திகதியிலிருந்து பதினன்கு நாட்களுக்குள் தேவைப்பட்ட கட்டணத்தை செலுத்தி வேலையைத் திருப்திகரமாகச் செய்துமுடிப்பதற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஒப்பந்தம் செய்துகொள்ளல்வேண்டும். தேர்ந்தெடுக்கப் பட்ட கேள்விப்பத்திரகாரர் முழுத் தொகையில் ஐந்து வீதம் பிணைப்பண மாகக் கட்டுதல் வேண்டும். ஏற்கனவே செய்துகொண்டுள்ள ஒப்பந்தத் தை மீறினல் அவர் கட்டிய பணத்தை இழப்பதோடு ஒப்பந்தங்களை மீறுபவருக்கான பட்டியலில் அவரின் பெயரும் இடம்பெற நேரிடும்.

6. அரசாங்க ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்தக்காரர் என அரசாங்கம் தீர்மானிக்கப்பட்டவர், அல்லது வேறு எந்தக் காரணத் திற்காகவோ தகுதியற்றவர் என்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் அறிந்தால் தனிப்பட்ட ஒருவரையோ அல்லது சங்கங்களையோ அரசாங்க அதிபரின் அபிப்பிராயத்தின்பேரில் எந்தவேளையிலும் நிரா கரிக்க முழு அதிகாரமும் உண்டு.

7. கேள்விப் பத்திரங்கள் அனுப்பும் சங்கங்கள் நிரந்தரமானதென்று தற்போது கடமை செய்யும் கிராம முன்னேற்ற உப–தலைவர், கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி உதவி ஆணையாளர் அல்லது தொழில் உதவி ஆணையாளர் உட்படச் சார்ந்த உத்தியோகஸ்தரிடமிருந்து பெற்ற பத்திரத்தைக் கேள்விப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல்வேண்டும். குறிப்பிட்ட சங்கம் கொந்திருத்துச் செய்வதற்குத் தகுதி வாய்ந்ததென்றும் அந்த உத்தியோகஸ்தரால் சிபார்சு செய்யப்படல் வேண்டும்.

8. எதேனும் ஒரு பகுதியை ஏற்கவோ, நிராகரிக்கவோ அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அதிகாரம் உண்டு.

9. கேள்விப் பத்திரங்களைப் பெற்றவர்கள் அதை முழுவதாகப் பூர்த்திசெய்து மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பாமலிருப்பவருக்கும், குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு ஒவ்வாத முறையில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்ததனுல் ஏற்றுக்கொள்ள முடியாத கேள்விப் பத்திரங்களை அனுப்பியவருக்கும் கேள்விப் பத்திரம் சார்பாகக் கொடுக்கப்பட்ட வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

10. இதைப்பற்றி மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் அம்பாறை மாவட்டக் கச்சேரிக் காரியாலயத்திலுள்ள காணிக் கந்தோரில் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வீ. நாராயணசாமி,
மேலதிக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம்,
அம்பறை, 1969, ஆனி மாதம் 26 ந் திகதி.

7–174—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

---

## இலங்கை உயர் தொழில் நுட்பவியற் கலாசாலை, கட்டுபெத்த, மொரட்டுவா

**இலங்கை உயர் தொழில் நுட்பவியற் கலாசாலைப் போசனசாலை, கட்டுப் பெத்த, மொரட்டுவா நடத்துவதற்கான உரிமை கோரும் கேள்விகள்**

மேற்படி போசனசாலையை நடத்துவதற்கான உரிமை கோரும் கேள்விபத்திரங்களை அதிபர், இலங்கை உயர் தொழில் நுட்பவியற் கலாசாலை, கட்டுபபெத்த, மொரட்டுவா ஏற்றுக்கொள்வார். கேள்விகள் இக்கல்லூரியின் காரியாலயத்தில் பெறக்கூடிய கேள்விப்பத்திரப் படிவத்தில் இருத்தல் வேண்டும். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/-ஐ காரியாலயம், இலங்கை உயர்தொழில் நுட்பவியற் கலாசாலை, கட்டுப்பெத்த, மொரட்டுவாவில் கட்டியதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்கள் 1969 ஜூலை மாதம் 18 ம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் 1969 ஜூலை மாதம் 19 ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முடிவடையும்.

தேர்வு பெற்ற கேள்விக்காரர், கேள்வி நிபந்தனைகளை திருப்திகரமாக நிறைவேற்றுவதற்கும் வழங்கப்பட்ட உபகரணங்களின் பாதுகாப்பிற்குமாக பிணைப்பணமாக ரூபா 1,000/- கட்டவேண்டும்.

தேர்வுபெற்ற கேள்விக்காரர் மொரட்டுவா நகரசபைக்கு அனுமதிப் பத்திரப் பணம் கட்டுவதோடு மாதாந்த வாடகையாக ரூபா 50/–ம் மின்சாரத்திற்காக ரூபா 100/–ம் கட்டவேண்டும்.

அதிபர் தனது விருப்பப்படி எந்தவொரு அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவும் ஒப்பந்தத்தை எந்த நேரத்திலும் முடிவு கட்டவும் உரிமையுடையவராவார்.

தேர்வு பெற்ற கேள்விக்காரர் அதிபரோடு ஒரு உடன்படிக்கைக்கு உட்படுவதோடு முத்திரைச் செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலதிகமான விபரங்களை காரியாலயம், இலங்கை உயர் தொழில் நுட்பவியற் கலாசாலை, கட்டுப்பெத்த மொரட்டுவாவில் பெற்றுக்கொள்ளலாம்.

எல். எச். சுமணதாசா,
அதிபர்.

இலங்கை உயர் தொழில் நுட்பவியற் கலாசாலை,
கட்டுபபெத்த,
மொரட்டுவா,
1969 ம் ஆண்டு ஜூன் மீ 26 ந் உ.

7–169—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

---

எமது இல. இஅ/1/238

## அம்பாறைக் கச்சேரி

கீழ் குறிப்பிடும் வேலைகளுக்காக பொதுக் கேள்விப் பகுதி நீர்ப்பாசன இலாகா அல்லது கல்விப் பகுதித் திணைக்களங்களில் கொந்திருத்துக் காரர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள் பிரத்தியேகமான கொந்திருத்துக்காரர் களிடமிருந்து 1969 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ம் திகதி காலை 11 மணி வரைக்கும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் முத்திரை வைக்கப் பட்ட "கேள்விப் பத்திரங்கள்" ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் வேறுவேருக கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

(1) 5 ம் இலக்கக் குடியேற்றத்திட்ட குடியேற்ற உத்தியோகஸ்தரின் வீடு திருத்தம்,

(2) விறிச் காம்ப் குடியேற்றத்திட்ட குடியேற்ற உத்தியோகஸ்தரின் வீடு திருத்தம்,

(3) 34 ம் இலக்கக் குடியேற்றத்திட்ட குடியேற்ற உத்தியோகஸ்தரின் வீடு திருத்தம்.

2. இத்தீவில் எக்கச்சேரியிலாவது ஒவ்வொரு வேலைக்கும் ரூபா பத்து (10) க்கு கேள்விப்பத்திர கட்டுப்பணமாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் பெயருக்குக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திலுள்ள காணிக்கந்தோரில் ஒப்புவித்து குறிக்கப்பட்ட கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். மேலும் முதலாம் பந்தியில் குறிப்பிட்ட சங்கங்களால் அப்பணம் கட்ட வேண்டியதில்லை. "கேள்விப் பத்திரங்கள்" பாரமெடுக்கும் கடைசித் திகதிக்கு முன்தினம் முற்பகல் 10 மணி வரைக்கும் "கேள்விப் பத்திரங்கள்" கொடுக்கப்படும்.

3. இரு பிரதிகளில் தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப் பத்திரங்களை மாவட்ட அதிபர், அம்பாறை என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அப்படியில்லாவிடின் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் காரியாலய உதவியாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அடங்கிய தபால் உறையின இடதுபக்க மேல் மூலையில் என்ன வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் எனக் குறிப்பிடப்படல் வேண்டும். குறிப்பிட்ட பத்திரங்களில் தெளிவாக எழுதப் படாதிருந்தால் அக்கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. 1969 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ம் திகதி காலை 11 மணிக்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில், காரியாலய உதவியாளரின் அறையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அப்படி கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது அவ்விடத்தில் கேள்விப் பத்திரகாரர் அல்லது அவரது கடிதத்தால் நியமிக்கப்பட்ட அவரின் பிரதிநிதியொருவர் சமூகம் கொடுப்பதற்கு இடமளிக்கப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரகாரருக்கு அதைப்பற்றி அறிவிக்கப்படும். அவ் அறிவித்தலில் குறிப்பிட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் தேவைப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிப்பதற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர் முழுத்தொகையில் ஐந்து வீதம் பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும். எற்கனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறினுல் அவர் கட்டிய பணத்தை இழப்பதோடு ஒப்பந்தத்தை மீறுபவருக்கான பட்டியலில் அவரின் பெயரும் இடம்பெற நேரிடும்.

6. அரசாங்க ஒப்பந்தங்களை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்தக்காரர் என அரசாங்கம் தீர்மானிக்கப்பட்டவர் அல்லது வேறு எந்தக் காரணத்திற்காகவோ தகுதியற்றவர் என்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் அறிந்தால் தனிப்பட்ட ஒருவரையோ அல்லது சங்கங்களையோ அரசாங்க அதிபரின் அபிப்பிராயத்தின்பேரில் எந்த வேளையிலும் நிராகரிக்க முழு அதிகாரமும் உண்டு.

7. கேள்விப் பத்திரங்கள் அனுப்பும் சங்கங்கள் நிரந்தரமானதென்றும் அதில் தற்போது கடமைசெய்யும் கிராம முன்னேற்ற உப–தலைவர் கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி உதவி ஆணையாளர் அல்லது தொழில் உதவி ஆணையாளர் உட்படச் சார்ந்த உத்தியோகஸ்தரிடமிருந்து பெற்ற பத்திரத்தைக் கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்ட சங்கம் கொந்திருத்துச் செய்வதற்குத் தகுதியுடையதென்று அந்த உத்தியோகஸ்தரால் சிபார்சு செய்யப்படல் வேண்டும்.

8. ஏதேனும் ஒரு பகுதியை ஏற்கவோ நிராகரிக்கவோ அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அதிகாரம் உண்டு.

9. கேள்விப் பத்திரங்களைப் பெற்றவர்கள் அதை முழுவதாகப் பூர்த்தி செய்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பாமல் இருப்பவருக்கும், குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு ஒவ்வாத முறையில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்ததனால் ஏற்றுக்கொள்ளமுடியாத கேள்விப் பத்திரங்களை அனுப்பியவருக்கும் கேள்விப்பத்திரம் சார்பாகக் கொடுக்கப்பட்ட வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

10. இதைப்பற்றி மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் அம்பாறை மாவட்டக் கச்சேரிக் காரியாலயத்திலுள்ள காணிக் கந்தோரில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வீ. நாராயணசாமி,
மேலதிக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம்,
அம்பாறை,
1969 ம் ஆண்டு ஆனி மாதம் 26 ம் திகதி.

7–173—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

---

## பொதுவேலைத் திணைக்களம்

கந்தளாய் பிரிவுக்காரியாதிகாரியின் விடுதி அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் அனுராதபுரம் பொது வேலைத் திணைக்கள வடமத்திய பகுதி கண்காணிப்பு பொறியியலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பொதுவேலைத் திணைக்கள திருகோணமலை மாவட்ட நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாகக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதரவிபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப்பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 36,000 க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 50 செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர். குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்த பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களைப் பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதிகாண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எம். ஆர். பொன்னுந்து,
கண்காணிப்பு பொறிவலாளர்,
வடமத்திய பகுதி.

பொதுவேலைத் திணைக்களம்,
அனுராதபுரம்,
1969 ம் ஆடு யூன் மீ 25 ந வ.

7–147—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861.

---

# ஆய விற்பனையும், குத்தகை விற்பனையும்

## சாராயத்தவறணை குத்தகை விற்பனவு—1969/70

### அம்பாரை மாவட்டம்

கீழக்காணும் சாராயத்தவறணை 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 1 ம் திகதிவரை சாராயம் சில்லறையாக விற்பனை செய்வதற்கு பிரத்தியேக உரிமைக்குரிய கேள்வி விண்ணப்பப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஒகஸ்து மாதம் 1 ம் திகதிவரை மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) 1969 ம் ஆண்டு ஜுன் மாதம் 6 ம் திகதியிடப்பட்ட 14,857 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரமான சாராயக்குத்தகை நிபந்தனைகளுக்கும்.

(ஆ) மதுபானத்தீர்வை உத்தரவுப்பத்திரங்கள் அனைத்திற்கும் ஏற்புடையவாய தற்போதய பொதுநிபந்தனைகளுக்கும் அமைய,

2. கீழ்க்குறிப்பிடப்பட்ட தவறணைக்கு ரூபா 3,000/– வீதம் யாதேனும் ஒரு கச்சேரியில் கட்டப்பட்ட பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரத்துடன் அணைத்திருத்தல் வேண்டும். ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் கோருவோரின் பூமி, ஆதனம் இருக்கும் பகுதியிலுள்ள இறைவரி உத்தியோகஸ்தரிடமிருந்து கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடும் தொகைக்கு25 வீதத்திற்குக் குறையாத பெறுமதிச்சான்றிதழ் அணைக்கப்படல்வேண்டும். இதில் குறிப்பிட்ட பூமி, ஆதனம் முதலியவற்றை அதற்கான பெறுமதிச்சான்றிதழ் பெற்றதன்பின் விற்பதோ மாற்றுவதோ ஒப்பந்தத்திற்கான நிபந்தனையை மீறுவதாகும்.

3. யாதேனும் கச்சேரி அல்லது கொழும்பு மதுவரி அதிகாரியின் காரியாலயத்தில் அல்லது திருகோணமலை மதுவரி உதவி அதிகாரியின் காரியாலயத்தில் அல்லது மட்டக்களப்பு வட்டார மதுவரிக் காரியாலயத்தில் பெறப்பாலனவாய மாதிரிப்பத்திரங்களில் ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

4. 1969 ம் ஆண்டு ஒகஸ்து மாதம் 1 ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு குறிப்பிட்ட இறுதி நேரத்தில் தவறணை ஒப்பந்தக் கேள்வியாளர்கள் சகலரும் இக்கச்சேரியில் சமுகமாயிருக்க வேண்டும். மேலதிக விபரங்களை அம்பாரைக் கச்சேரியில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

வி. சி. பி. உணந்தென்ன,
அரசாங்க அதிபர், அம்பாரை மாவட்டம்.

கச்சேரி, அம்பாரை,
1969 ம் ஆடு யூன் மீ 21 ந வ.

அனுமதிபெற்ற தவறணையின் நிரல் பின்வருமாறு

| தொ. இ. | பிரிவு | தவறணைதெரிவு செய்யப்படும் உள்ளூர் பிரதேசம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்க முடிவடையும் நேரம் |
|---|---|---|---|
| 1. | கரவாகுப்பற்று | பெரியநீலாவணைக்கிராமத்துக்குள் | மு.ப. 10.00 |

7–24—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

## குருநாகல் மாவட்டத்திலுள்ள சாராயக் குத்தகை விற்பனை, 1969–70

14,857 ம் இலக்கம் கொண்ட 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 6 ம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சாராய விற்பனைப் பிரசுரமும் மற்றும் தற்பொழுது அமுலிலிருக்கும் மதுபரிபாலன அனுமதிப் பத்திரங்களின் பொது நிபந்தனைக்களுக்கமையும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள அரசாங்கத் தவறணைகளில் 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதி வரை சாராயம் சில்லறையாக தவறணைகளில் விற்பனை செய்வதற்கு பிரத்தியேக உரிமைக்குரிய கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ந் திகதி வரைக்குள் குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மேற்படி தேவையான கேள்விப்பத்திரங்களை எக்கச்சேரியிலாவது பெற்றுக்கொள்ளலாம். கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்ட தொகையை வைப்புத் தொகைப் பணமாக கச்சேரியில் கட்டியதற்கு கச்சேரி பற்றுச் சீட்டையும் சாராயக் குத்தகை விற்பனை நிபந்தனைகளுக்கமையப் பெற்ற தங்களின் பெறுமதிப் பத்திரத்தையும் முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களுடன் மெழுகிட்ட தபாலுறையில் வைத்து தபால் உறையின் மேற்புற இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் தவறணையின் பெயரும் அதற்கான இலக்கமும் எழுதப்பட்டு குருநாகல் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் இதற்கான கேள்வி விண்ணப்பப் பெட்டியில் சேர்க்கப்படவேண்டும். அல்லது அட்டவணையில் குறிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்கும் நேரம் முடிவடையுமுன் குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபருக்குப் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்களில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் இருப்பின் அவைகளை விண்ணப்பக்காரர்கள் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். இப்படிச் செய்யத் தவறிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. எல்லா கேள்வி விண்ணப்பக்காரர்களும் மூடும் திகதியான 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ந் திகதி முற்பகல் 9.00 மணிக்கு குருநாகல் கச்சேரியில் சமூகமளிக்க வேண்டும்.

5. கேள்வி விண்ணப்பப் பத்திரத்தையோ அல்லது பத்திரங்களையோ காரணமின்றி நிராகரிக்கும் பொறுப்பு அரசாங்க அதிபரையே சார்ந்தது.

6. சித்தியெய்திய கேள்வி விண்ணப்பக்காரர் பிரத்தியேக உரிமையாளர் எனப் பிரகடனப் படுத்தப் பட்டவுடன் குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபரால் குறிக்கப்படும் குறைந்த பட்சம் 2 மாதக் குத்தகைத் தொகையை உத்தரவாத வைப்புப் பணமாக பிரத்தியேக உரிமையாளரெனப் பிரகடனப் படுத்தப்பட்ட அன்று பிற்பகல் 2.00 மணிக்குப் பிந்தாமல் செலுத்தவேண்டும். மேலும் விண்ணப்பக்காரர் சாராயக் குத்தகை விற்பனவு நிபந்தனைகளடங்கிய அட்டவணையில் கைச்சாத்திட வேண்டும்.

7. 1969–70 ம் ஆண்டிற்கான இடங்கள் தற்பொழுது இருக்கும் சாராயத் தவறணை இடங்களாகவே இருக்குமென்பது நிச்சயமல்ல. இது சம்பந்தப்பட்ட இடங்களெல்லாம் குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபரின் அனுமதியைப் பெற்றவைகளாக இருத்தல் வேண்டும்.

8. மேலதிக விபரங்கள் குருநாகல் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

எச். பீ. திசாநாயக,
அரசாங்க அதிபர், குருநாகல் மாவட்டம்.

குருநாகல் கச்சேரி,
1969 ம் ஆண்டு ஜூன் மீ 23 ந உ.

### அட்டவணை

#### அனுமதிக்கப்பட்ட சாராயத் தவறணைகள்—குருநாகல் மாவட்டம், 1969–70

| தொடர் இலக்கமும் தவறணையின் பெயரும் | | பிரிவு | கிராம எல்லைகள் | தவறணை திறக்கும் நேரம் காலை | தவறணை மூடும் நேரம் மாலை |
|---|---|---|---|---|---|
| 1 | கட்டிமஹன | கடுகம்பொல ஹத்பத்து | கட்டிமஹன கிராம எல்லைக்குள் | 8.00 | 7.00 |
| 2 | துனகயெனிய | கடுகம்பொல ஹத்பத்து | துனகதெனிய கிராம எல்லைக்குள். | 8.00 | 7.00 |
| 3 | யக்வில | கடுகம்பொல ஹத்பத்து | யக்வில கிராம எல்லைக்குள் | 8.00 | 7.00 |
| 4 | குருநாகல் | குருநாகல்மாநகர சபை எல்லைக்குள் | 2, 3, 4, 5, 6, 8, 9ம் குருநாகல் மா நகர சபை வட்டாரங்களுக்குள் (எஸ்பிளனேட் வீதி, பசார் வீதி, பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வீதிகள் தவிர) | 8.00 | 8.00 |
| 5 | மாவத்தகம | வேவுடவில்லி ஹத்பத்து | மாவத்தகம கிராம எல்லைக்குள் | 8.00 | 8.00 |
| 6 | இரிஉல்ல | கடுகம்பொல ஹத்பத்து | மல்கடிவ கிராம எல்லைக்குள் | 8.00 | 7.00 |
| 7 | நாரம்மல | தம்பதெனி ஹத்பத்து | நாரம்மல பட்டின சபை எல்லைக்குள் | 8.00 | 7.00 |

#### குத்தகைப் பணமும் கேள்விப்பத்திரங்கள் மூடப்படும் நேரமும்

| தொடர் இலக்கமும் தவறணையின் பெயரும் | | வைப்புப்பணம் | கேள்விப்பத்திரங்கள் மூடப்படும் நேரம் |
|---|---|---|---|
| 1. | கட்டிமஹன | ரூ. 500 00 | காலை 9 00 |
| 2. | துனகதெனிய | ரூ. 500 00 | காலை 9 30 |
| 3. | யக்வில | ரூ. 500 00 | காலை 10 00 |
| 4. | குருநாகல் | ரூ. 4000 00 | காலை 10 30 |
| 5. | மாவத்தகம | ரூ. 1000 00 | காலை 11 00 |
| 6. | இரிஉல்ல | ரூ. 1000 00 | காலை 11 30 |
| 7. | நாரம்மல | ரூ. 1000 00 | நண்பகல் 12 00 |

7–52—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

## யாழ்ப்பாண மாவட்ட சாராயக் குத்தகை விற்பனை, 1969–70

கீழ்க்காணும் சாராயத்தவறணையில் 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ம் திகதி கால எல்லை வரை சாராயம் சில்லறை விற்பனை செய்வதற்குள்ள சிறப்புரிமை வழங்கும் கேள்விகள் கீழே குறிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய ஏற்கப்படும்.

(1) 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 6 ம் திகதிய 14,857 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சாராயக் குத்தகை விசேஷ விதிகள் ;

(2) நடைமுறையிலிருந்து வரும் சகல கலால் உத்தரவுச் சீட்டுக்களின் பொது விதிகள்.

2. இல. 1—பெரியகடை, இல. 2—கரையூர், இல. 3—வல்வெட்டித்துறை, இல. 4—ஊர்காவற்றுறை, இல. 5.—வண்ணன் கேணி, ஆகிய ஒவ்வொரு தவறணைக்கும் ரூபா 5,000 – கட்டுப்பணமாகக் கட்டிய திறைசேரி அல்லது எந்தவொரு கச்சேரிப் பற்றுச்சீட்டைக் கட்டிப் பெற்ற கேள்வி விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். பற்றுச் சீட்டும் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும், பொறிக்கப்பட்ட காகித உறைக்குள் வைக்கப்பட்டு இடதுபக்க மேல் மூலையில் கீழே குறிக்கப்பட்டதுபோல விளக்கமாக எழுதல் வேண்டும். "கேள்விப்பத்திரம்—சாராயத்தவறணை, இல. 1—பெரியகடை, இல. 2—கரையூர், இல. 3—வல்வெட்டித்துறை, இல. 4—ஊர்காவற்றுறை, இல. 5—வண்ணன்கேணி, யாழ்ப்பாண மாவட்டம் 1969/70."

மேற்கூறிய ஐந்து சாராயத்தவறணைகள் பெயரிலும் தனித்தனியான கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ம் திகதி வியாழக்கிழமை கீழே குறிப்பிட்ட நேரங்களுக்கு முன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக கச்சேரியில் வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ம் திகதி வியாழக்கிழமை ஒவ்வொரு தவறணையின் பெயருக்கெதிரே குறிக்கப்பட்ட நேரத்திற்கு கேள்வி விற்பனவு முடிவடையும்.

| | | |
|---|---|---|
| (அ) | சாராயத் தவறணை இல. 1—பெரியகடை | மு. ப. 9.30 மணி |
| (ஆ) | சாராயத் தவறணை இல. 2—கரையூர் | மு. ப. 10.00 மணி |
| (இ) | சாராயத் தவறணை இல. 3—வல்வெட்டித்துறை | மு. ப. 10.30 மணி |
| (ஈ) | சாராயத் தவறணை இல. 4—ஊர்காவற்றுறை | மு. ப. 11.00 மணி |
| (உ) | சாராயத் தவறணை இல. 5—வண்ணனன்கேணி | மு. ப. 11.30 மணி |

கேள்வியாளர்கள் யாவரும் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு இக்கச்சேரியில் சமுகமளிக்க வேண்டும்.

4. (அ) ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் கேள்விப்பத்திரத்துடன் தமது அசைவற்ற ஆதனங்கள் இருக்கும் பிரிவுக்காரியாதிகாரியிடமிருந்து பெறுமதிப்பத்திரம் பெற்று இணைக்கவேண்டும். அல்லது நம்பிக்கை உத்தரவாத முறிப்பத்திரம் இணைக்கவேண்டும். அத்தகைய பெறுமதிப் பத்திரத்தின் அல்லது நம்பிக்கை உத்தரவாத முறிப்பத்திரத்தின் பெறுமதி, கேள்விக் குத்தகைத் தொகையின் 25% விகிதத்திற்குக் குறையாமல் இருக்கவேண்டும். இம்மாவட்டத்தின் அல்லது வேறுபல மாவட்டத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைகளுக்கு விண்ணப்பிக்கும் கேள்வி விண்ணப்பக் காரர் அதே வேளையில் வேறு தவறணைகளுக்குக் கேள்விப்பத்திரத்துடன் குறித்த ஆண்டுக்குரிய பெறுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதியை இணைத் திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரத்தின் பிரதி ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொரு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதியிலும் மூலப் பிரதி இணைக்கப்பட்ட தவறணை இருக்கும் மாவட்டத்தையும் தவறணையின் பெயர், இலக்கம் ஆகிய விபரங்கள் அடங்கிய குறிப்பு இருக்கவேண்டும்.

(ஆ) தெரிவுபெற்ற கேள்வியாளரால் கொடுக்கப்பட்ட பெறுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட ஆதனத்தை அல்லது ஆதனங்களை அல்லது அவை களின் உரிமையை எழுத்துமூலம் என்முன் அனுமதி பெறுமல், விற்பதோ, ஈடு வைப்பதோ ஒப்பந்த நிபந்தனைகளுக்கு முரணபட்ட செய்கையாகும்.

(இ) கூட்டாகச் சேர்ந்து விண்ணப்பிக்கும்பொழுது யாராவது ஒருவரால் அல்லது பலரால் கொடுக்கப்படும் ஆதனம் பெறுமதிப்பத்திரத்தின் கூட்டுத்தொகை கேள்வி நிபந்தனைக்கு அமையுமானுல் போதுமானதாகும்.

5. யார் தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளரென்பதை அறிவித்ததும் அவர் ஒப்பந்த விதிகள் அடங்கிய பத்திரத்தில் கைச்சாத்திட்டு அரசாங்க அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட தொகையைப் பிணைப்பணமாகக் கட்டல் வேண்டும்.

6. நியமனம் பெற்ற எந்த ஒரு கேள்வியாளராவது மேற்கூறிய சாராயத்தவறணை சாராயம் விற்பதற்கு கேட்டுக்கொண்டபடி ஒப்பந்த விற்பனை நிபந்தனைகள் அடங்கிய பத்திரத்தில் கைச்சாத்திட மறுத்தால் அல்லது நிர்ணயித்த பணத்தைக் கட்டத் தவறினுல் அவர் முதலில் செலுத்திய கேள்விப்பணத்தை இழக்க வேண்டியதுடன் அவரது பெயர் தவறுனர்களால் உத்தரவுச்சீட்டு நிரலிலும் சேர்க்கப்பட்டுவிடும். இவற்றைத் தவிர்த்து மற்றெல்லாக் கேள்வியாளர்களின் கட்டுப்பணம் விற்பனை நிபந்தனைகளில் கைச்சாத்திட்டு பிணைப்பணம் கட்டியபின் திருப்பிக் கொடுக்கப்படும்.

7. ஒரு பிரதிநிதி மூலமாக விண்ணப்பித்தால் அல்லது இலங்கையர் அல்லாதவர் விண்ணப்பித்தாலும் அல்லது மேற்கூறிய சாராயக் குத்தகை விற்பனவு 5 ம், 6 ம் விதிகளின்படி நிராகரிக்கப்பட்டவராய் இருந்தால் அவரது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. எந்தவொரு கேள்வியையும் அல்லது எல்லாவற்றையுமே காரணம் ஏதும் காட்டாமல் நிராகரிக்க அரசாங்க அதிபருக்கு உரிமை உண்டு.

9. 1969/70 ம் வருடக் குத்தகைக்கு, தற்பொழுது தவறணை இருக்கும் இடங்கள் கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை. தவறணைக் காகத் தெரிவு செய்யப்படும் இடம் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் முன் அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறியவேண்டுமாயின் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு மனுச்செய்து பெற்றுக்கொள்ளலாம்.

11. அனுமதிபெற்ற தவறணைகளின் நிரல் பின்வருமாறு :—

| தவறணை இல. | பகுதி | தவறணை தெரிவுசெய்யப்படும் பிரதேசம் | தி. நே. காலை | மூ.நே. மாலை |
|---|---|---|---|---|
| 1 | பெரியகடை—யாழ்ப்பாணம் மாநகரசபையின் 14 ம் வட்டாரம் | யாழ்ப்பாணம் மாநகரசபையின் புகையிரத நிலையம் வட்டாரம் 14 | 8.00 .. | 8.00 |
| 2. | கரையூர்—யாழ்ப்பாண மாநகரசபையின் 3 ம் வட்டாரம் | யாழ்ப்பாணம் மாநகரசபையின் 3 ம் வட்டாரமாகிய கதிரேல் .. | 8.00 .. | 8.00 |
| 3. | வல்வெட்டித்துறை—வல்வெட்டித்துறைப் பட்டினசபையின் 3 ம் வட்டாரம் | வல்வெட்டித்துறைப் பட்டினசபையின் 3 ம் வட்டாரத்தில் .. | 8.00 .. | 7.00 |
| 4. | ஊர்காவற்றுறை .. .. .. | ஊர்காவற்றுறைப் பட்டினசபையின் எல்லைக்குள் .. | 8.00 .. | 8.00 |
| 5. | வண்ணனன்கேணி—பச்சிலைப்பள்ளி .. .. | வண்ணணன்கேணிக் கிராமத்தில் .. .. | 8.00 .. | 6.30 |

எவ். சீ. பீற்றேர்ஸ்,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்,

கச்சேரி, யாழ்ப்பாணம்.
1969 ம் ஞு ஜூன் மீ 24 ந வ.

7–99—4.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,861

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

## இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிரீம் கோட் புறெக்ரறல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவவொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. | ச. | வெளியூர் ரூ. | ச. |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. | 0 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | 1 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. .. | 0 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர் தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **யூன்** .. .. | 6.6.69 | வெள்ளி .. | 30.5.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 13.6.69 | வெள்ளி .. | 6.6.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 20.6.69 | வெள்ளி .. | 13.6.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 27.6.69 | வெள்ளி .. | 20.6.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **யூலை** .. .. | 4.7.69 | வெள்ளி .. | 27.6.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11.7.69 | வெள்ளி .. | 4.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18.7.69 | வெள்ளி .. | 11.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25.7.69 | வெள்ளி .. | 18.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஓகத்து** .. .. | 1.8.69 | வெள்ளி .. | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 8.8.69 | வெள்ளி .. | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 15.8.69 | வெள்ளி .. | 8.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22.8.69 | வெள்ளி .. | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29.8.69 | வெள்ளி .. | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **செத்தெம்பர்** .. .. | 5.9.69 | வெள்ளி .. | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.9.69 | வெள்ளி .. | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19.9.69 | வெள்ளி .. | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.9.69 | வெள்ளி .. | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஒற்ரோபர்** .. .. | 2.10.69 | வியாழன் .. | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.69 | வியாழன் .. | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17.10.69 | வெள்ளி .. | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 24.10.69 | வெள்ளி .. | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31.10.69 | வெள்ளி .. | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| **நவெம்பர்** .. .. | 7.11.69 | வெள்ளி .. | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 14.11.69 | வெள்ளி .. | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 21.11.69 | வெள்ளி .. | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28.11.69 | வெள்ளி .. | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **திசம்பர்** .. .. | 5.12.69 | வெள்ளி .. | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி .. | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி .. | 12.12.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி .. | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*பதில் அரசாங்க அழுத்தகன்.*

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1969 ம் ஆண்டு யூன் மீ 13 ந உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.